# 2.12 இந்தப் பிரித்தெடுத்தல்

**வேத வசனம்:** உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. 1 யோவான் 2:15

**அறிக்கை:** ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவன் தேவனுடைய அன்பை விட்டுப் பிரிந்து விடுவான்

**சத்தியம்:** நாம் அந்தகாரத்தினின்று தேவனுடைய அதிசயமான வாழ்க்கைக்குள் நுழைந்திருக்கிற தேவனுக்குச் சொந்தமான பரிசுத்த ஜாதிகள்.

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *தேவனுடைய அன்பும் உலகத்தின் அன்பும் இருப்பது ஏன்? (1 யோ. 2:15-27)*
- *இந்த உலகத்தினுடையவைகள் என்று நீ கருதுபவை எவை?*
- *கொலோ 3:1,2 ல் கூறியுள்ளபடி நாம் எப்போது பெலனுள்ள மனுஷனாகவோ, மனுஷியாகவோ மாற முடியும்?*

## பாடக்குறிப்புகள்

- **இந்த உலகத்தின் இராஜ்யம்** - *1 சாமு.16:7*
- **நாம் இந்த உலகத்திற்குச் சொந்தமானவர்கள் அல்ல** - *கொலோ 3:1,2, ஏசாயா 60:2,3*
- **நமக்கு வேறு எந்தத் தெய்வமும் கிடையாது** - *யாத்.20:2,3*
- **நாம் நல்ல தீர்மானங்களை எடுக்க வேண்டும்** - *1 யோவான் 2:15*

## வேதப்பகுதி

*1 சாமுவேல் 16:1-13*

## பிரித்தெடுத்தல் - இது ஓர் ஆசீர்வாதம்

நாம் இந்த உலகத்தின் வழக்கங்களைக் கைக்கொள்பவர்களாக அல்லாமல் தேவனுடையவைகளையே கைக்கொள்பவர்களாக இருக்க வேண்டும். எவ்வளவு குறைவாக உலகத்தோடு செலவிடுகிறோமோ அவ்வளவு நெருக்கமாக தேவனிடம் நெருங்குவோம். அது ஒரு சிறந்த ஆசீர்வாதம். விமானத்தில் பறக்கும் ஒருவர் நடுத்தர வகுப்பு இருக்கையைத் தெரிந்தெடுத்திருந்தால், முதல் வகுப்பு இருக்கையில் அமர முடியாது. அதுபோலவே மனிதனும் ஒரே நேரத்தில் தேவனையும் உலகத்தையும் பிடித்துக்கொள்ள முடியாது. உலகக் காரியங்கள் தேவனுடைய அன்பை மனிதனை விட்டுத் துரத்திவிடும். ஆகையால் உலகத்தின் காரியங்களை விட்டுப்பிரிந்து இருப்பதைத் தெரிந்தெடுத்துகொள்ளுவதே சிறந்தது.

### செயல்

**உன்னைத் தேவனிடமிருந்து பிரிப்பதைக் கண்டுபிடித்து அது மீண்டும் உங்களுக்கு இடையில் வராதபடி பார்த்துக்கொள்**

### சிந்திக்க:

*உன்னுடைய முன்னுரிமைகள் எதைப் பிரதிபலிக்கின்றது? உலகத்தையா அல்லது தேவனையா?*

___

___

### ஜெபம்:

*உலகத்திலுள்ளவைகளை அல்லாமல் தேவனையே சார்ந்து கொள்ள உதவி செய்யும் ஜெபத்தைக் கீழ்க்காணும் இடத்தில் எழுது.*

___

___